TAMIL NADU LEGISLATIVE LIBRARY
20 AUG 1980
MADRAS-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1980 பிப்ரவரி, 4.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கொல்லிமலைப் பகுதி வேளாண்மை விளைபொருள்கள் விற்பனை

*வினா எண். 21—திரு. வ. சின்னசாமி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலையில் விளையும் கனிகளையும் விவசாயப் பொருள்களையும் அங்குள்ள லேம்ப் (LAMP) சொசைட்டி வாங்குவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவைகளுக்கு நியாயமான விலை கிடைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) மற்றும் (ஆ) கொல்லிமலையில் விளையும் கனிகளையும், விவசாயப் பொருள்களையும் கொல்லிமலை பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்குமாறு வாங்குகிறது.

திரு. துரை கோவிந்தராசன்; தலைவரவர்களே, கொல்லி மலையில் விளையும் கனிகளையும் மற்றுமுள்ள விவசாயப் பொருட்களையும் பயன்படுத்திக் கொள்ளுகின்ற வகையில், ஏதாவது தொழில் தொடங்கி, அந்த விவசாயிகளின் பொருளாதாரத்தைப் பெருக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, மலைவாழ் மக்களால் விளைவிக்கப் படுகின்ற பழங்களை கொள்முதல் செய்து, அவர்கள் பயனடையும் வகையில் பழம் பதனிடும் தொழிற்சாலை ஒன்று இந்தச் சங்கத்தால் நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்தக் கொல்லிமலை 'லேம்ப் சொசைட்டி' சரியாக நடைபெறாததற்கு வன இலாகாவினர்தான் காரணம் என்று சொல்லப்படுகிறது. பல்வேறு இடங்களில் இப்படிப்பட்ட பிரச்சினை இருக்கிறது. அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கமாக எந்த எந்த இடத்தில் முறைகேடுகள் இருக்கின்றன என்று தகவல் கொடுத்தால் உரிய நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படும்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, சித்தேரி லேம்ப் சொசைட்டியில் கான்டிராக்ட் விடாமல் தனியார்களுக்கு விடுவதாக அங்குள்ள மக்கள் சொல்வது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கொல்லிமலை பற்றிய கேள்வி.

கடலை எண்ணெய் தாயரிப்பு ஆலைகள்

*வினா எண். 22—திரு மு. அம்பிகாபதி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் விளையும் கடலையை மூலப்பொருளாகக் கொண்டு தஞ்சை, தென் ஆற்காடு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் எண்ணெய் ஆலைகளை உருவாக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலத்தில் உள்ள சூரியகாந்தி விதை எண்ணெய் பிழியும் ஆலையில் தற்போது கடலை எண்ணெயும் பிழியப்படுகிறது. வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலையில் ஒரு கடலை எண்ணெய் பிழியும் ஆலை அமைக்கும் வேலை நடந்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆலை அமைக்கும் செயற்குறிப்பேதும் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, திருவண்ணாமலையில் ஒரு கடலை எண்ணெய் பிழியும் ஆலை அமைக்கப்படுவதாகச் சொன்னார்கள். எப்போது வேலை தொடங்கப்படும் ? துரிதமாக வேலை நடக்கவில்லை என்று தெரிகிறது. துரிதமாக வேலை நடைபெற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?